**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08032024-7088

Volume: 8

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2023

Accepted: 23.12.2023

Published: 01.01.2024

Citation:
Chandrakumar, Sundaralingam. "Humanity Activity of Nanthan Character in Veerakumarn Vadamodi Koothu - A Study." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 3, 2024, pp. 58–64.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i3.7088

*Corresponding Author:
chandrakumars@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Humanity Activity of Nanthan Character in Veerakumarn Vadamodi Koothu – A Study

**Sundaralingam Chandrakumar**
*Senior Lecturer, Department of Fine Arts, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0000-0003-0774-9666*

**Abstract**
The Events of Rituals and performing arts provide space for people to live together, celebrate, and enjoy in the contemporary globalization environment. Artistic activities create new awareness among the society. Koothu theatre is a form of community theatre studied among the Eelam Tamils. It also helps to achieve optimal stability. While the Scrip of the Koothu is written with stories from Bharata and Ramayana, historical stories, fables, social justice stories, etc. are also included. The written script of 'Veerakumaran' in Sri Lanka is performed in a version of the Vadamodi Koothu style.It is also performed as a Therukoothu in Tamil Nadu. This Veerakumaran drama shows that the humanity not found in the kings and the so-called high castes is always present in the common people. This study is designed with a qualitative approach and descriptive research methodology. The article is selected as the model for this review. Data is collected and analyzed by re-reading the transcript. The study aims to reveal the human nature of the character 'Nanthan'. Research question: Nandan on how life-saving and educational services realize remarkable humanity through characterization. As a result of these findings, Nanthan, the leader of Paraicherry, rescues and takes care of Queen Sornakandhi with love and compassion when she loses her husband due to the conspiracy of a minister pregnant Sornakandhi. Nanthan also arranged, guided, and comforted the midwife to deliver her child. Later, Nanthan raised the child as his uncle and taught him many skills. The lesson of this is to reveal that life-saving and educational services are available to ordinary people without dominant power.

**Key Words:** Humanity, Nanthan, Kooththu Theatre, Veerakumaran Script, Education Service

**References**
1. Veerakumaran Drama Vadamodik Koothu among Sri Lankan Tamils A Danceable Collective. (Handwritten Copy).
2. Sivasubramanian, B. (2018). Basement People's History. New Century Book House (B) Litt., Chennai.
3. Gautham, Raj. (2018). In the Tamil Community Virtue and Energy. New Century Book House (B) Litt., Chennai.
4. Kamlabasin, (2004). Patriarchy is a Overview. Tamil Nadu Women's Federation, Tamil Nadu, Bethel, Madurai.
5. Suresh, R. (2022). Chandrakumar, Su. (Author) Realist Poem Literature and Analysis, Kumaran Book House, Colombo - Chennai.

# வீரகுமாரன் நாடகம் வடமோடிக் கூத்தில் நந்தன் பாத்திரத்தின் மனிதநேயச் செயற்பாடு – ஓர் ஆய்வு

***சுந்தரலிங்கம் சந்திரகுமார்***
முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*சமகால உலகமயமாக்கல் சூழலில் மனிதர்கள் கூட்டுணர்வுடன் வாழ்வதற்கும், கொண்டாடி மகிழ்வதற்குரிய வெளியைச் சடங்குகளும் கலைநிகழ்வுகளும் கொடுக்கின்றன. கலைச் செயற்பாடுகள் சமூகத்தின் மத்தியில் புதிய புதிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றன. ஈழத்துத் தமிழர் மத்தியில் பயிலப்படும் சமுதாய அரங்கவடிவமாகத் திகழ்வது கூத்தரங்காகும். இது ஆற்றுகைநிலை அடைவதற்குக் கூத்துப் பிரதியும் துணைபுரிகின்றது. கூத்துப் பிரதிகள் பாரத, இராமாயணக் கதைகளைக் கொண்டு எழுதப்பட்டாலும் வரலாற்றுக்கதைகள், கட்டுக்கதைகள், சமூக நீதிக்கதைகள் முதலியவற்றையும் உள்ளடக்கமாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்படுகின்றன. "வீரகுமாரன்" எனும் எழுத்துப் பனுவல் இலங்கையில் வடமோடிக் கூத்துப் பாணியாக ஆடப்படும் பிரதியாகும். இது தமிழ்நாட்டில் தெருக்கூத்தாகவும் ஆடப்படுகின்றது. இந்த வீரகுமாரன் நாடகக்கதை அரசர்களிடமும் தம்மை உயர்சாதி எனக்கூறுவோரிடமும் காணப்படாத மனிதநேயம் சாதாரண மக்கள் மத்தியில் எப்பொழுதும் நிறைந்துள்ளது என்பதை உணர்த்துகின்றது. இவ் ஆய்வு பண்புசார் நுட்பத்துடன் அணுகி விளக்கமுறை ஆய்வுமுறையியலுடன் வடிவமைக்கப்படுகின்றது. கூத்துப் பிரதி இவ் ஆய்வுக்கான மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இப்பிரதியை மீள்வாசிப்புச் செய்வதனூடாகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆய்வின் நோக்கம் "நந்தன்" எனும் பாத்திர வார்ப்பினூடாக வெளிப்படும் மனிதநேயப் பண்பினை வெளிப்படுத்துவதாகும். ஆய்வு வினா நந்தன் பாத்திர வார்ப்பினூடாக உயிர்ப் பாதுகாப்பும் கல்விச் சேவையும் குறிப்பிடத்தக்க மனிதநேயத்தை எவ்வாறு உணர்த்துகின்றது என்பதாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *மனிதநேயம், நந்தன், கூத்தரங்கு, வீரகுமாரன் நாடகம். கல்விச்சேவை*

**அறிமுகம்**

ஈழத்துக் கூத்தில் வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்துப் பாணிகள் வெவ்வேறு கதைப் பனுவல்களை மையப்படுத்தி ஆற்றுகை செய்யப்படுகின்றன. அவ்வாறு ஆடப்படும் கூத்து மரபில் இலங்கையில் உள்ள மட்டக்களப்பில் இன்றும் நிகழ்த்தப்பட்டு வரும் கூத்தில் "வீரகுமாரன்" எனும் கூத்துப் பிரதி குறிப்பிடத்தக்கது. ஒரு மந்திரி தனது நாட்டு அரசனை வேட்டைக்கு அழைத்துச் செல்லும்பொழுது ஏமாற்றிக் கொலை செய்தபின்னர் அவரது அரசாட்சியைப் பறித்து, அரசியை அரண்மனையை விட்டுத்துரத்துகின்றான். அப்பொழுது அவ்வரசிக்கு அடைக்கலம் கொடுத்து, பாதுகாத்துத் தனது தங்கை போல் பராமரித்து வளர்த்த நற்பண்புடைய மனிதரே நந்தன். நந்தன் பறையர் சமூகத்தவர். சமகால மனித வாழ்வில் பொய்யும், புரட்டும், வன்புணர்வும் மலிந்து போய் உள்ளது. இச்சூழலில் நல்ல மனிதர் ஒருவரால் ஒரு பெண்ணிற்கு ஏற்படும் சவால்களில் இருந்து விடுபடுவதற்கான கருத்தியலைத் தருவது கவனத்திற்குரியது. கூத்தாற்றுகை ஊடாக இவ்வாறான மனிதநேயத் தன்மையை மக்களிடம் பரவலாக்கி நல்வழிப்படுத்துவது அவசியமாகும்.

சவால்களை எதிர்கொண்ட பெண்ணை மீட்கும் நந்தனின் நற்குணமும் அவளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அணுகுமுறையும் படிப்பினைக்குரியது. அவரிடமுள்ள அன்பு, இரக்கம், கருணை ஆகியன சாதிய, அரச அதிகாரத்தைத் தலைகீழாக்குகின்றது. இங்கு சாதாரண மனிதரிடமே மனிதநேயத்தைத் தேடமுடியும் என்பதை உணரலாம். புராணக் கதைகளை மையப்படுத்தி எழுதப்பட்ட நாடகப் பனுவல்கள் அதிகாரத்தை முதன்மைப்படுத்த இந்த வீரகுமாரன் நாடகம் விளிம்புநிலை அணுகுமுறையுடன் எழுதப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்ஆய்வு பண்புசார் நுட்பத்துடன் அணுகி விளக்கமுறை ஆய்வு முறையியலுடன் வடிவமைக்கப்படுகின்றது. வீரகுமாரன் கூத்துப் பிரதி பிரதான மாதிரியாகக் கையாளப்படுகின்றது. அத்துடன் இக்கூத்து ஆடப்பட்ட இடங்கள், ஆடிய கூத்தர்கள், கூத்தைப் பயிற்றுவித்த அண்ணாவிமார், பார்த்த மக்கள் ஆகியவையும் மாதிரிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரதி மீள்வாசிப்புச் செய்யப்பட்டு தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், களத்தில் இக்கூத்தை ஆடிய கூத்தர் சமூகத்தினரிடம் நேர்கண்டமை, இக்கூத்தில் முனிவர், வேடர் பாத்திரங்களை ஏற்று இவ்ஆய்வாளர் ஆடியமை, ஆற்றுகை மையமாகக் கற்பித்தமை ஆகிய நேரடி அனுபவங்களுடனும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

வீரகுமாரன் கூத்தாற்றுகையில் இவ்ஆய்வாளர் ஈடுபட்டதால் சுய இனவரையியல் (Auto Ethnography) முறையியலும் பயன்படுத்தப்படுகின்றது. சுயஇனவரைவியல் (Auto Ethnography) என்பது பண்பாட்டு அனுபவத்தையும், தனிமனித அனுபவத்தையும் முறையாகப் பகுப்பாய்வு செய்ய பெரும் துணைபுரிவது. இதனால் இலங்கைக் கூத்துமரபில் நேரடியாக ஈடுபட்டதன் அனுபவத்துடன் பகுப்பாய்வு செய்ய சுயஇனவரையியல் வழிப்படுத்துகின்றது.

## வீரகுமாரன் நாடகக் கட்டமைப்பும் நந்தன் பாத்திர வார்ப்பும்

விஜய நகரத்தை ஆண்ட வீரசூரனுக்கும் சொர்ணகாந்திக்கும் குழந்தைப்பேறு இல்லாததால் சிவனிடம் மன்றாடி பிள்ளைவரம் பெறுகின்றனர். வீரசூரன் தனது மந்திரியுடன் வேட்டையாடச் செல்லும்பொழுது மந்திரியால் திட்டமிட்டுக் கிணற்றில் தள்ளி கொல்லப்படுகின்றான். அரச ஆட்சிக்கு ஆசைப்பட்ட மந்திரியினால் இவ்வாறு தந்திரமாக நடத்தப்படுகின்றது. கர்ப்பிணியான சொர்ணகாந்தி பின்னர் இவனால், அரண்மனையில் இருந்து வெளியேற்றப்படுகின்றாள். சொர்ணகாந்தி காட்டில் விறகு எடுத்து விற்று வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, சந்திரகிரி எனும் அரசன் அவள்மீது ஆசை கொண்டு இணையக் கேட்கிறான். அவள் மறுத்துத் தப்பித்து ஓடி ஆற்றில் வீழ்ந்து, சிரமப்பட்டு மறுகரைசேர்ந்து நடந்து செல்கின்றாள். செல்லும்பொழுது நந்தனைக் கண்டு தனது வரலாற்றைக் கூறுகின்றாள். தங்கச்சி நீ துயரப்பட வேண்டாம் உன்னை நான் பராமரிக்கின்றேன் (கையெழுத்துப் பிரதி) என்று கூறி, மருத்துவிச்சியை அழைத்துப் பிரசவம் பார்க்கச் சொல்கின்றான். சொர்ணகாந்திக்கு “வீரகுமாரன்” எனும் அழகான குழந்தை பிறக்கின்றது. வீரகுமாரன் வளர்ந்ததும் நந்தன் அவனை உபாத்திரியாரிடம் அழைத்துச் சென்று கற்பிக்கின்றான். நந்தனால் வில் - அம்பு முதலான பயிற்சியும் வழங்கப்படுகின்றது. தொடர்ந்து வித்தைகள், சாஸ்த்திரங்கள் கற்றுத் தேர்கின்றான். சித்திரசேனன் எனும் வீரனுடன் சண்டையிட்டுத் தனது வீரத்தை நிரூபிப்பதும், முனிவர் தோன்றி அவனை விடுவிப்பதும் நடக்கின்றது. இறுதியாக முனிவர் சிந்தாமணி எனும் அரசி பற்றி தெரிவிப்பதும், அவளிடம் வீரகுமாரன்

சென்று கவிப்போர் செய்வதும் இருவரும் பெற்றோரின் விருப்புடன் திருமணம் செய்வதுமாகக் கதை நகர்ந்து முடிவடைகின்றது. வீரகுமாரன் நாடகத்தின் தொடக்கம், முரண், வளர்ச்சி, உச்சம், முடிவு எனும் நகர்வுகள் சரியான ஒழுங்கில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கதை ஓட்டத்தில் நந்தன் முக்கியமான மனிதநேயப் பண்புடையவனாகத் திகழ்கின்றான். அவனால் துயரத்தில் மூழ்கித்தவித்த பெண் காப்பாற்றப்படுவது முக்கியமானது. காட்டில் தனியாக வாழ்ந்த சொர்ண காந்தியை சந்திரகிரி எனும் அரசன் அடைய முற்படும்பொழுது அவள் ஆற்றில் வீழ்ந்து மறுகரைக்குத் தப்பிச்செல்கின்றாள். இது சமூகத்தில் அதிகாரத்தில் இருப்போர் தமது அதிகார ஆதிக்கத்தால் பெண்ணை அடக்கி ஒடுக்கும் நிலை காணப்பட, சாதாரண மக்கள் மனிதப் பண்புடன் பிறரை நேசிப்பதையும், ஆற்றுப்படுத்துவதையும் சுட்டுகின்றது. ஒரு படைப்பு விளிம்புநிலைப் பார்வையில் எழுதப்படும்பொழுதே அப்படைப்பின் பெறுமதி வலுவடையும். வழமையாக எழுதப்படும் புராணக் கதைசார்ந்த கூத்துப் பனுவலில் இருந்து இப்பனுவல் அதிகார உடைப்பின் அணுகுமுறையுடன் எழுதப்பட்டுள்ளது. தெரிதா குறிப்பிடுவது போன்று பெரும்கதையாடல் கட்டவிழ்க்கப்பட்டு சிறுகதையாடல் முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமென்பது இந்நாடகப் பனுவலில் நிறைந்துள்ளது. இதனாலேயே சாதாரண மக்களின் மனிதப் பண்பு வெளிக்காட்டப்படுகின்றது. அல்லது புராணக்கதைப் பனுவல் போல் சாதாரண மக்களை நகைப்புக்குரியதாகவே வார்த்திருப்பர். சில கூத்துக் கதைகளில் பறையர், வண்ணார், குறவர் பாத்திரங்கள் மது அருந்திவிட்டு உடலை நகைப்புடன் அசைத்து, வளைந்து நெழிந்து ஆற்றுகை செய்வதாகக் கீழ்நிலைப்படுத்தி கட்டமைக்கப்பட்டிருக்கும். இந்தநிலை வீரகுமாரன் நாடகப் பனுவலில் இல்லை. பறையர் சமூகத்தின் தலைவரான நந்தன் நேர்மையான - பிறருக்கு உதவும் மனப்பாங்குள்ள நல்ல மனிதனாகக் கட்டமைக்கப்பட்டுள்ளார். கூத்து வரவின் தாளக்கட்டு வீரர் வரவுடையதாக வேகமாகப் பிரயோகிக்கப்பட்டது. இங்கு மற்றது (The other) என ஒதுக்கி வைக்கப்பட்டதை முன்னிலைப்படுத்துவதாக அமைகின்றது.

பின்நவீனத்துவ பன்மை அரசியலின் ஒரு பகுதியாக இனக்குழு அரசியலையும் அதன் வேறுபட்ட அடையாளங்களையும் பேசவேண்டிய சூழலும் தேவையும் தற்போது எழுந்துள்ளது. உலகமயம், தாராளமயம் போன்ற முதலாளித்துவ பெருங்கதையாடல்கள் சிறு மரபுகளையும் அவற்றின் தனித்துவமான பண்பாட்டுக் கதையாடல்களையும் அழித்தொழிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. பிராமணியம் தொடர்ந்து தனது கருத்தியல் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் பொறிமுறைகளை மிக நுட்பமாகச் செயற்படுத்துகின்றது (சுரேஷ், 2022) எனும் ர. சுரேஷின் கருத்தியல் கவனிக்கத்தக்கது. இனக்குழுமத்தின் பாத்திரம் ஒன்றை பாரம்பரியக் கூத்தில் வார்க்கும் பொழுது பிராமணிய - பார்ப்பனிய அதிகாரக் கருத்து நிலை நின்று வார்ப்பதை உள்ளூர்ப் புலவர்கள் நிறுத்த வேண்டும். அப்பொழுதே அடிப்புற இனக்குழுப் பண்பாட்டு அடையாளங்களை - அதில் வரும் மனிதர்களை பாத்திரமாக வார்க்கும்பொழுது பன்மைத்துவ சிந்தனையுடனும், ஆதிக்க மையக் கட்டவிழப்பு எண்ணக் கருவுடனும் படைக்க வழிப்படுத்தும். வீரகுமாரன் நாடகத்தில் நந்தன் பாத்திரத்தின் வார்ப்பு பன்மைத்துவமாக மையக் கட்டவிழ்ப்புடன் வார்க்கப்பட்டுள்ளது.

## நந்தனும் அவனது மனிதநேயப் பண்பும்

சந்திரகிரி அரசனின் துர்நடத்தை காரணமாக அவனிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஆற்றைக் கடக்க முற்பட்ட சொர்ணகாந்தி, ஆற்றில் அவதியுற்று தண்ணீரில் மூழ்கி உடலும், மனமும் தளர்ந்து, கடவுளை

மன்றாடி மெதுவாக ஆற்றைக் கடக்கின்றாள். தனிமையில் காட்டில் தவித்துக்கொண்டிருந்த சொர்ணகாந்தியை நந்தன் கண்டு விசாரித்து அவள் நிலை அறிந்து உதவுகின்றான். நந்தன் துன்பத்தில் மூழ்கித் தவித்த கற்பிணித் தாயைத் துயர் நீங்கப் பாதுகாப்பதும், பிரசவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் அவனிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மனிதநேயப் பாடமாகும். பெண் உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கப்படும்பொழுது அவளை மீளவும் சந்திரகிரி அரசனைப்போல் துயரத்தில் வீழ்த்தாது, பலாத்காரம் செய்யாது அன்புடன் அரவணைத்துத் தங்கையாக அணுகிப் பாதுகாப்புக் கொடுப்பது அவனது கருணை உள்ளத்தைச் சுட்டுகின்றது. வன்னடத்தையில் ஈடுபடும் ஆண்கள் இவரிடம் மனிதாபிமானத்தைக் கற்பதற்கான சூழமைவைக் கொடுக்கின்றது. அதிகாரத்தைச் சுய விமர்சனம் செய்ய வைக்கின்றது.

தம்மை உயர் சாதி என்போரால் ஓரங்கட்டப்பட்ட பறையர் சமூகத்தவரே நந்தன். அரசியான சொர்ணகாந்தி பிரசவ வலியால் அவதியுறும்பொழுது அரச அதிகாரக் கீழ்ப்புத்திபோல் அவளைத் துன்புறுத்தவில்லை. மாறாக மனிதத் தன்மையுடன் அணுகி, நேசித்து தேவையான உதவியைச் செய்கின்றார். சொர்ண காந்தியைப் பார்த்து,

> **ஆரம்மா இந்தச் சேரி அருகினில் வந்து நின்று சூரிய உதயம் போலே துலங்கிய அன்னையாரே**
> **காரணமாக இந்தக் காட்டினில் வந்ததென்ன சீருடன் ஊரும் பேரும் சீக்கிரம் உரைசெய்குவாயே**

என்று நந்தன் ஆறுதல் வார்த்தை கூறித் தாயன்புடன் வினவுவது அவனது கருணை உள்ளதைக் காட்டுகின்றது.

நந்தன் சொர்ணகாந்திக்கு பிரசவம் பார்ப்பதற்காக மருத்துவிச்சியை அழைத்து பிரசவத்திற்காகத் தன்னிடம் இருந்த பொன், பொருள் முதலியவற்றைக் கொடுக்கிறான். இவ்வாறான ஏற்பாடு அன்புருவான மனிதத்துவத்தைக் காட்டுகின்றது. மருத்துவிச்சி பிரசவம் பார்த்து பிள்ளையைக் கையிலெடுத்து வீராதி வீரன் பிறந்தான் விவேகமான வீராதி வீரன் பிறந்தான் எனக் கூறித் தாயை ஆறுதல் வார்த்தையால் மகிழ்வித்து ஆனந்தமடைய வைப்பது நந்தனின் உதவியினாலேயாகும்.

**கல்வி கற்பித்தல்**

கல்வி கற்பிப்பதும் அதனைச் சரியாகக் கற்பதும் அனைவருடைய கடமை. குழந்தைப் பருவத்தில் பொருத்தமான கல்வியைக் கற்பித்து நற்பிரஜையாக்குவது அவசியமானது. இது வீரகுமாரன் நாடகத்தில் சுட்டப்படுகின்றது. நந்தன் மாமா பிறந்த குழந்தைக்கு வீரகுமாரன் எனப் பெயர் சூட்டி வீரனாக வளர்க்கின்றார். மருமகனின் கல்வியைச் சிறப்பாக வழங்குவதற்காக உபாத்தியாரிடம் கல்வி கற்பிக்கச் சகல ஏற்பாடுகளையும் செய்கின்றான். வாரும் தம்பி உன்னைப் பள்ளிக்கூடம் சேர்க்க வேண்டும் போவோம் தம்பி எனும் நந்தனின் கூற்று கவனத்திற்குரியது. இளமையில் கல்வியைக் கற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கும் உயர்ந்த மனிதர் என்பதைச் சுட்டுகின்றது. வீரகுமாரன் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் கற்று, யானை -குதிரை மேல் ஏறுவது ஈறாகக் கற்றுத் தேர்வதற்கு வழிப்படுத்தப்படுகின்றான். அவ்வாறே நந்தன் தாய் சொர்ணகாந்தியை மதிக்கக் கற்றுக் கொடுக்கின்றான்.

சிந்தாமணி எனும் அரசி செகவீர ராசனுடைய மகள். இவள் வீரத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்குபவள். வீரகுமாரன் அவளிடம் ஆசைகொள்ளும் பொழுது நந்தன் புத்திமதி கூறி அவனைத் தடுக்கிறான். அவள் மேல் கொண்ட மோகத்தை விடும் தம்பி எனும் அவனது கூற்று இதனைப் புகட்டுகின்றது. எனினும் வீரகுமாரன் நந்தன்

மாமாவின் சொல் பேச்சைக் கேட்காது சிந்தாமணியிடம் சென்று அவளைக் கவி பாடி வென்று வருகின்றான். தனது வீரத்தால் வெற்றி பெற்றதாக எண்ணி வீரகுமாரன் சிந்தாமணிக்கு விறகுக் கட்டையைத் தலையில் வைத்துத் தூக்கி வருவதற்குக் கட்டளையிடுகின்றான். இதனைக் கண்ட நந்தன் கவலையடைந்து, தம்பி இது என்ன, பாவம் கோசலாபுரியை ஆண்ட பட்டத்து அரசியல்லவா. அவளுடைய தலையில் விறகுக் கட்டை ஏற்றலாமா அந்த விறகுக் கட்டைப் பூமியில் போடச் சொல்லும் தம்பி என்று சொல்கின்றார். நந்தனின் இந்த மனப்பாங்கும், நடத்தையும் குறிப்பிடத்தக்க மனிதநேயமாகும். ஒரு பெண் ஆணால் துன்பத்திற்கு உள்ளாகி அடக்கப்படும் பொழுது அவளைக் காப்பாற்றி உதவும் மனிதாபிமான உணர்வு கவனத்திற்குரியது. இப்படிப்பினை சமகால ஆண்களுக்கு மிக்க அவசியமானது. ஆணாதிக்க அதிகாரத்தைக் கீழ்நிலைப்படுத்தும் அணுகுமுறையை நந்தன் பாத்திர வார்ப்பு பாடம் புகட்டுகின்றது. மக்கள் மையப்படுத்தப்பட்டு ஆற்றுகை செய்யும் கூத்துக் கலைவடிவத்தினூடாக இவ்வாறான நல்லமனிதப்பண்புகள்பரவலாக்கப்படுவது முக்கியமானது.

### வியாக்கியானிப்பும் உரையாடலும்

ஆதிக்க அதிகாரத்தவர்களால் குறிப்பாக, சில அரச அதிகாரத்தாலும், சாதிய அதிகாரத்தாலும் மனிதநேயமற்ற செயற்பாடுகள் எப்பொழுதும் நடந்தேறிக் கொண்டே இருக்கின்றன. அதிலும், ஆணாதிக்கம் பெண்களை மேலும் உள - உடல்ரீதியாகப் பாதிப்படைய வைக்கின்றது. சாதாரண குடியிலுள்ள ஆண் அரச குலப் பெண் துயரத்தில் ஆழ்ந்தபொழுது அவளுக்குக் கருணை காட்டி சகோதரியாக அணுகிப் பாதுகாப்பது கற்றலுக்குரியது. சமகால வாழ்வியல் வெளியில் இந்த மனிதப் பண்புள்ள உறவே அவசியமானது. அரசு சார்ந்த அல்லது சாதிய அதிகாரம் சார்ந்த கூத்துப் பிரதியில் அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்கான அறம் - நீதிக் கருத்துகளைப் படைத்துப் பரவலாக்கிக் கட்டமைக்கும் வெளியில், வீரகுமாரன் போன்ற படைப்புக்கள் மாற்றுக் கருத்தியலுடன் மேலெழுவது கவனத்திற்குரியது. தலித்திய அணுகுமுறையில் நந்தன் பாத்திரம் இப்படைப்பில் நிலைநிறுத்தப்படுகின்றது. தலித்தியம் அதிகாரத்திற்கு எதிராகக் கலகக் குரலை ஏற்படுத்துவது. அது இங்கு வெளிப்படையாகக் காட்டப்படாவிட்டாலும், அதிகார மையத்திற்குப் பெரும் படிப்பினையாகக் கொடுக்கின்றது.

அமைச்சனால் வீரசூரனின் அரசு திட்டமிட்டுக் கைப்பற்றப்பட்டு, கர்ப்பவதியான சொர்ணகாந்தி வெளியேற்றப்படுகின்றாள். இது அரச அதிகார நலன் சார்ந்ததே. புராணக்கதைகளை மையப்படுத்திய கூத்துப் பனுவல்கள் சாதியையும், பால்நிலை அசமத்துவத்தையும் பிரதிபலிப்பதாக அமைய "வீரகுமாரன்" போன்ற கதைகளை மையப்படுத்திய பனுவல்கள், பால்நிலை சமத்துவத்தையும், நல்லிணக்கத்தையும், மனிதநேய விரிவாக்கத் தினையும் மையப்படுத்துகின்றன.

அரச அதிகாரத்தால் ஓரங்கட்டப்பட்ட சாராண மக்களே இவ்வரச அதிகாரத்தில் இருந்த அரசிக்குச் சவால்கள் ஏற்படும் பொழுது உணர்வுப்பூர்வமாக அடைக்கலம் கொடுப்பதை அறியலாம். வீரசூரன் எனும் அரசனின் மகனான வீரகுமாரன் நந்தனிடம் உருவான வீரன். இவனது தாய் மேட்டிமையோரால் துன்புறுத்தப்பட்டு, ஓரங்கட்டப்பட்டவள். இவ்விடத்தில் இரு சமூகக் கட்டமைப்புக்களுக்கிடையில் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துவது மனிதநேயம் என்பதைப் புலப்படுத்துகின்றது.

அடித்தள மக்கள் மீதான பாலியல் வன்முறையை நாட்டார் வழக்காறுகளின் பல்வேறு பிரிவுகள் குறிப்பிடுகின்றன (சிவசுப்பிரமணியன், 2028). இதனூடாக

அணுகும்போது, வீரகுமாரன் நாடகப் பனுவல் போன்ற படைப்புக்கள் மேட்டிமைச் சமூகத்தவரே மனிதாபிமானமின்றி பாலியல் வன்முறைக்கு செல்பவர்கள் என்பதைச் சுட்டுகின்றது. இவ்வாறான மாற்றுக் கதைகள் கூத்துக்களாக எழுதி ஆடப்படுவது அவசியம். மேட்டிமைகள் தீண்டத்தகாரதவர்கள் என்று ஒடுக்கிய பெண்களையே வன்புணர்வுக்கு உட்படுத்துபவர்கள். அவர்களிடம் எவ்வாறு மனிதநேயம் வலுப்பெறும் என்பதனை இப்பிரதி மறுவாசிப்புச் செய்ய வைக்கின்றது.

ஆணாதிக்கத்தின் உச்சத்தால் தமது அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் கீழ்நிலை அனுபவங்கள் பலவிதமாக உள்ளன. பாகுபாடுகள், அவமதிப்பு, கட்டுப்படுத்தல், கண்டுகொள்ளாமல் இருத்தல், சுரண்டல், ஒடுக்குதல், வன்முறை, குடும்ப - வன்முறை, வேலை செய்யுமிடத்தில் வன்முறை, சமூகத்தில் ஒட்டுமொத்த வன்முறை போன்ற கீழ்நிலைப்படுத்தும் நிகழ்வுகளை வர்க்க வேற்றுமையின்றி அனைத்துப் பெண்களும் அனுபவித்து வருகின்றனர். இந்த நிகழ்வுகளின் தன்மைகள் மாறலாம், ஆனால், உட்பொருள் ஒன்றே எனும் கம்லாபாசின் கருத்தாக்கம் கவனத்திற்குரியது.

## முடிவுரை

மனிதநேயத்தை எப்பொழுதும் அதிகாரத்தில் தேடமுடியாது. அதனைச் சாதாரண மக்களிடமே தேடமுடியும். நந்தனின் மனிதநேயம் பிறரை மதித்தல், அடைக்கலம் கொடுத்தல், கருணை உள்ளத்துடன் செயற்படுதல் முதலான பிறருக்கு உதவி, பாதுகாப்புக் கொடுக்கும் மனப்பாங்கு ஆகும். உயர் வர்க்கம் என்போரிடம் நேர்மையற்ற, மனிதத் தன்மையற்ற போக்கே நிலவுகின்றது. வன்னடத்தையும், பலாத்காரமும் அதிகரிக்கும் இச்சூழலில், மனிதநேயப் படிப்பினையை விளிம்புநிலை அணுகுமுறையுடன் எழுதப்பட்ட படைப்பிலேயே பார்க்கமுடியும். நந்தன் போன்ற நற்பண்புடைய மனிதரையே இவ்வுலகம் வேண்டி நிற்கின்றது.

## உசாத்துணை நூல்கள்

1. வீரகுமாரன் நாடகம் வடமோடிக் கூத்து இலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஆடப்படும் கூத்துப்பனுவல். (கையெழுத்துப் பிரதி - எழுதிய ஆசிரியர் தெரியாது).
2. சிவசுப்பிரமணியன், ஆ. (2018). அடித்தள மக்கள் வரலாறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
3. கௌதமன், ராஜ். (2018). தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
4. கம்லாபாசின், (2004). ஆணாதிக்கம் ஒரு கண்ணோட்டம். தமிழகப் பெண்கள் கூட்டமைப்பு, தமிழ் நாடு, பெத்தேல், மதுரை.
5. சுரேஷ், ர. (2022). அணிந்துரை. சந்திரகுமார், சு. (நூலாசிரியர்) யதார்த்தநாட கவியல் இலக்கியமும் பகுப்பாய்வும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.